உ

கடவுள் துணை

# பெண்களே உங்களுக்கு

## மில்க்வைற் பொன்விழா ஆண்டு

## 1927 --- 1977



வெளியீடு:

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**

யாழ்ப்பாணம் — இலங்கை

3-2-77.

உ
கடவுள் துணை

# பெண்களே உங்களுக்கு

மில்க்வைற் பொன்விழா ஆண்டு
1927 — 1977

★

தொகுத்தவர் :

க. சி. குலரத்தினம்

★

வெளியிடுவோர் :

சிவநெறிப்புரவலர், சமாதான நீதவான்

**க. கனகராசா அவர்கள்**

மில்க்வைற் தொழிலதிபர்

" திருஆலவாய் "

யாழ்ப்பாணம் — இலங்கை

**1977**

பெண்களே! பெண்களே!
8704

# சுவாமி சிவானந்தர்

தாய்மார்களே!

உலகின் தலைவிதியே உங்கள் கையில் தான் இருக்கிறது. குழந்தையின் ஒழுக்கத்தை உருவாக்குவது நீங்கள்தான். எதிர்கால காந்திஜி, நெப்போலியன், ஷேக்ஸ்பியர்களை நீங்கள் உருவாக்கலாம். எல்லாம் உங்கள் கையில்தான் இருக்கிறது.

பாரத நாட்டுப் பெண்மணிகள் தர்மத்தின் உறைவிடமாகத் திகழ்கிருர்கள். அதனுல்தான் இந்த நாட்டில் இத்தனை காலம் தர்மம் தழைத்து வந்திருக்கிறது.

குழந்தை ஒன்றினிடத்து ஏற்படும் பதிவுகள் நிரந்தரமானவை, மாற்றமுடியாதவை. இளம் பருவத்தில் ஒருவனது குணங்களை உருவாக்கி ஒருவனது கடைசி நிமிடம்வரை இந்தப் பதிவுகள் அவனைத் தொடர்கின்றன. எனவே

ஒரு தாய்க்குள்ள பொறுப்பு மிகப் பெரிது. தொட்டில் பருவத்துப் பதிவுகள், பழக்கங்கள் சீரிய ஆன்மீகப் பதிவுகளாக அமைகின்றனவா என்பது குறித்து அவள் கருத்துச் செலுத்த வேண்டும். உண்மையான ஆத்மீகப் பண்பாட்டினைச் செழிப்பான இளம் உள்ளங்களில் தாயானவள் பதிப்பிக்க வேண்டும்.

தாய்மார்கள் வாழ்க்கையின் உண்மைத் தத்துவத்தை அறிந்துகொள்ள வேண்டும். அவர்கள் தெய்வநெறியில் நிற்கவேண்டும். அப்பொழுதுதான் தங்கள் குழந்தைகளையும் அவர்கள் நன்னெறியில் செலுத்தமுடியும். அப்பொழுதுதான் தங்கள் கணவன்மார்களுக்கு உதவியாக இருந்து அவர்களையும் அவர்கள் நல்வழிப்படுத்த முடியும்.

# மகாத்மா காந்தி அடிகள்

கணவன் மனைவியை அளவுக்குமிஞ்சி அடிமைப்படுத்தலாகாது. கணவனுக்கு எடுத்துக் காட்டாக இராமனையும், மனைவிக்கு எடுத்துக் காட்டாகச் சீதையையும் நான் கொண்டிருக்கிறேன். சீதை இராமனுக்கு அடிமையாகவோ, இராமன் சீதைக்கு அடிமையாகவோ இருந்து வாழ்க்கை நடத்தவில்லை.

தான் செய்வதே சரியென்றும், தன்னுடைய முயற்சிகள் யாவும் மிகவும் உயர்ந்த இலட்சியத்தை நாடி நிற்பவை என்றும் மனைவி கருதினால், அதன்படியே அவள் நடந்துகொள்ளலாம். அப்படி நடந்துகொள்ள அவளுக்குப் பூரண உரிமையுண்டு. பெண்கள் மக்கள் இனத்துக்குத் தாய்மாராவர்.

தன் கடமைகளைச் சரிவரச் செய்கின்ற பெண் உயர்ந்த அந்தஸ்தை அடைகிறாள். ஆண்களுக்குச் சட்டபூர்வமாக என்னென்ன வசதி

கள் இருக்கின்றனவோ, அந்த வசதிகள் யாவும் பெண்களுக்கும் இருத்தல் வேண்டும். கடவுள் படைப்பில் பெண்ணில் பெருந்தக்கது ஒன்றில்லை. பெண் ஆணுக்குத் தோழி. ஆணைப் போலவே அவளும் அறிவுத் திறனுடையவள். அவனைப் போலவே அவளுக்கும் சுதந்திரமும் உரிமையும் உண்டு.

பெண்கள் செய்யவேண்டிய முக்கியமான வேலை குடும்பத்தைக் கவனித்துக்கொள்வதாய் இருக்கும். மற்ற வெளிவேலைகளில் அவளுடைய ஈடுபாடு குறைவாகவே இருக்கும். அகிம்சைத் துறையில் தைரியமாக ஈடுபடவும், ஆராய்ச்சிகள் செய்யவும் ஆண்களைக் காட்டிலும் பெண்களே மிகவும் தகுதியுடையவர்கள். பெண் என்ருல் தியாகத்தின் வடிவம் என்று கருதுகிறவன் நான். ஆனுல் ஆண்களுக்கு இல்லாத அபாரமான சக்தி தங்களிடம் உண்டு என்பதைத் துர்அதிட்டவசமாகப் பெண்கள் மறந்தே போனுர்கள்.

நல்ல காரியங்களிலே கணவனைத் தாங்கள் திருப்பிவிடலாம் என்பதை மாதர்குலம் இன்னும் அறிந்துகொள்ளவில்லை. தம்மை அறியாமலே அந்தச் செல்வாக்கைப் பெண்கள் செலுத்து கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் அது போதாது. அவர்கள் அதை உணர்தல் வேண் டும். அந்த உணர்வு பலத்தைக் கொடுக்கும். வாழ்க்கைத் துணைவரைத் திருத்துவதற்குரிய வழியையும் காட்டும்.

புலன் அடக்கத்தின் மூலமாகக் கருப்பத் தடை செய்வது கடினமான காரியந்தான். ஆனால் அதனால் உண்டாகின்ற நலன்கள் மிக மேலானவையாகும். புலன்களைச் சரியானபடி கட்டுப்படுத்தாது, பிள்ளைப்பேற்று உறுப்புக் களைக் கட்டுப்பாடு செய்வது சாத்தியமன்று. உள்ளே உள்ள எதிரிகளை எதிர்த்து நிற்கத் திறனின்றிக் கற்பனை செய்துகொண்டு வெளியே இருப்பவர்களோடு போர் செய்பவனை உண்மை யான போர்வீரன் என்று சொல்லமுடியாது.

கருப்பத்தடை என்பது வண்டிக்குப் பின் மாட்டைப் பூட்டுவது போலாகும்.

தன்னடக்கம் என்பது எல்லோருக்கும் பொதுவான அறமாகும். தன்னைத்தான் வெற்றி கொள்வது பேரானந்தத்தைத் தரும். மண வாழ்க்கைப் பிரமச்சரியமே மேலான வாழ்க்கையாகும். ஆடவர் குலத்தை நல்ல தந்தையராகவும், நல்ல கணவன்மாராகவும், நல்ல பிள்ளைகளாகவும் உருவாக்கவல்லவர் பெண்களைத்தவிர வேறு யாருமேயில்லை.

மழை, வெயில், காற்று ஆகியவற்றைப் பொருட்படுத்தாது பார்ப்போரின் கவனத்தைத் தன்வசம் ஈர்க்கும் பொருட்டு ஆடை அணிவதைப் பெண்கள் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மாசு மறுவற்ற இளமை விலைமதிக்க முடியாத ஒரு சொத்து. ஊதாரித்தனமாக அதனைச் செலவழிக்கக்கூடாது.

விளையாட்டுப் பொம்மைகள் ஆவதற்காகப் பெற்றோர்கள் பெண்களைப் பள்ளிக்கு அனுப்புவ

தில்லை. கருணை மிகுந்த சகோதரிகளாக உரு வாதல் வேண்டும் என்று கருதியே உங்களைப் பள்ளிக்கு அனுப்பினார்கள் என்பதைப் பெண் குழந்தைகள் கருத்திற்கொள்ளுதல் வேண்டும். பார்வதியைப் போல், சீதையைப் போல் பெண் கள் நம்மிடையே தோன்றவேண்டும்.

வேலை கிடைக்காத குறையால், ஆயிரக்கணக் கான ஆண்களும் பெண்களும் சாப்பாட்டுக்கு வழியின்றித் தவித்துக்கொண்டிருக்கும் வரை யில் எங்கள் சகோதரிகள் தங்கள் உடம்மை அலங்கரித்துக் கொள்வதற்காக, அல்லது தங்க ளிடம் நகைகள் உண்டு என்பதைக் காட்டுவதற் காக விலையுயர்ந்த நகைகளை வைத்திருப்ப தற்கு நியாயமே இல்லை. இதைப் பெண்கள் நன்முக உணர்தல் வேண்டும்.

பெண்ணின் உண்மையான ஆபரணம் புனிதமான ஒழுக்கமேயாகும். உலோகமும் கல் லும் உண்மையான ஆபரணங்களாகமாட்டா. சீதை, தமயந்தி முதலானோர் மாசு மறுவற்ற

கற்பையுடையவர்கள் என்ற முறையில் நம்மிடையே புனிதத் தன்மையைப் பெற்றிருக்கின்றனர்.

துன்பத்தைக்கண்டு உருகுகின்ற கருணை உள்ளம் பெண்களுக்கு உண்டு. எனவே ஏழைகளின் துன்பநிலை உங்கள் இதயத்தைத் தொடுதல் வேண்டும்.

❋

பெண்மக்கள் இரைந்து பேசுதல், கடுஞ்சொல் கூறல், பலமுறை கூவியழைத்தல், இன்னுச்சொல் கூறல், எவரோடாயினும் கலகஞ்செய்தல், பயனில் சொல் கூறல் ஆகிய இவை இல்லாதவர்களாக இருத்தல் வேண்டும்.

— சுக்கிரநீதி

# மகான் அரவிந்தர்

"அன்னை" இதுவே மகான் அரவிந்த மகரிஷியின் மந்திரச் சொல், நினைப்பு, செயல். அன்னை என்பது உலகை ஆளும் அம்பிகை பராசக்தியே. உலகம் தெய்வலீலை. அந்த நிலைக்குச் சாட்சியாய் இருப்பவன் பரமன். அவன் குறிப்பின் வண்ணம் உலக லீலையை நடத்துபவள் அன்னை பராசக்தி. வாழ்வின் எல்லையற்ற குண கர்ம விகாரங்கள் யாவும் அந்த லீலைக்குச் சாதனங்களேயாம். அந்த லீலையினாலேதான் உலக பரிணாமம் நடக்கிறது. கல், புல், புழு, பூச்சி, விலங்கு, மனிதன் என்று உணர்வு நிலைகள் மேலோங்குகின்றன. மனிதன் தேவனாவதே லீலையின் கருத்தாகும். சாதாரண மனித வாழ்வு தெய்வத்தன்மை பெறல்வேண்டும். மன வேறுபாடுகளால் துன்பச் சுழலில் அகப்பட்டுத் தவிக்கும் உயிர், இன்பமயமாதல் வேண்டும். ஆசை ஆணவங்களால் எழும் போர் வினைகள் ஒழிந்து, மனித சமுதாயம் ஆன்மநேய ஒருமை

யில் வாழவேண்டும். ஒருவரையொருவர் அடிமைப்படுத்தல் ஆகாது. எல்லாரும் ஆத்ம சுதந்தரராக, தெய்வத் திருவருளுக்கே ஆளாக, கட்டும் கவலையுமின்றி வாழவேண்டும். சுய நலப் பேராசையை வளர்க்காமல் எல்லாச் செயல்களும் கடவுள் திருக் குறிப்புக்கே வேள்வி யாதல் வேண்டும். செயலின் பயனெல்லாம் தெய்வ நிவேதனமாதல் வேண்டும். மனிதன் நோய், துயர், சாவின் அச்சம் முதலியவையின்றி அமரத்தன்மை பெறவேண்டும். புருஷன் புருஷோத்தமனாதல் வேண்டும். மனிதன் அதி மனிதனாதல் வேண்டும். இந்த நிலைபெற அவனது உயிர் ஒரு சக்திக்கனலால் பழுக்கவேண்டும். அந்தச் சக்தியால் மேன்மேலும் வளர்ச்சிபெற்றுத் தெய்வநிலை சேரல்வேண்டும். அந்த வளர்ச்சிக்குரிய சக்தியை அருளும் பரதேவதையே அன்னையாவாள்.

அவளே யோகசக்தி, போகசக்தி, தேக சக்தி, பிராணசக்தி, ஆத்மசக்தி, திவ்யஜீவன சக்தி. அவளே மகா சரஸ்வதியாகி அன்பரின்

குறைகளைத் தீர்த்து நிறைவு தருகிறார். அவளே மகாலட்சுமியாகி திருவும், செல்வமும், சீரும், சிறப்பும் தருகிறாள். அவளே மகா காளியாகி அற்புதமான ஜயசக்தியளித்துத் தங்கு தடைகளைத் தகர்த்தெறிந்து வழி நடத்துகிறாள். அவள் கருணையாலே தான் மனிதனும் சமுதாயமும் நாடும் உலகமும் பெறவேண்டியதெல்லாம் பெற்று இன்பமுற முடியும். அவள் அவதாரமே உலகின் உய்வு.

❋

கற்பிற் சிறந்த பெண் ஆராயாது பேசுதல், இறுமாந்து பேசுதல், சினந்து கூறல், அழுக்காறுற்றுப் பேசுதல், மிகவும் பழிக்கப்படுவனவாகிய குறளை கூறல், பிறரைத் துன்புறுத்துதல், விடயங்களில் மிகுபற்று, அகங்காரம், செருக்கு, கடவுளும் இம்மை மறுமை முதலியனவும் இல்லை என்னும் கொள்கை, வலாற்காரம், களவு, இடம்பம் ஆகிய இக் குற்றங்களையும் ஒழித்தல் வேண்டும்.

— சுக்கிரநீதி

# வள்ளுவர் வகுத்த
# வாழ்க்கைத் துணைநலம்

இல்லறத்திற்குத் தகுந்த மாட்சிமை உடைய வளாய் தன்னை மணந்த கணவனின் வருவாய்க் குத் தகுதியாய் வாழ்பவளே இல்வாழ்க்கைக் குத் துணையாவாள். மனைவியிடத்தில் இல்லறத் துக்குரிய குணஞ்செயல்களின் மாட்சி இல்லை யானால், அவ்வில் வாழ்க்கையானது எவ்வளவு சிறப்புடையதாயினும் பயனில்லை. ஒருவனுக்கு மனைவி குணஞ் செயல்களில் மாட்சியுடையவ ளானல், அவனுக்கு எல்லாம் உண்டு. அம் மனைவி குணஞ்செயல்களில் மாட்சி உடைய ளாகாதபோது, இருப்பது ஒன்றுமில்லை. கற்பு என்று கூறப்படும் மனவுறுதி வாய்க்கப்பெற் ருல், பெண் பிறவி போல மிக மேம்பட்டவை ஒன்றுமில்லை. வேறு தெய்வத்தை வணங்காத வளாய், தன் கணவனையே தெய்வமாக வணங்கி எழுகின்றவள் பெய்க என்று சொல்ல மழை

யானது பெய்யும். தன்னைக் கற்பொழுக்கத்தில் தவறாது காப்பாற்றி, தன்னை மணந்துகொண்ட கணவனை உபசரித்து, தகுதி நிறைந்த புகழைக் கெடாது பாதுகாத்து குணஞ்செயல்களில் மறதியில்லாதவளே பெண்ணெனக் கூறத் தகுந்தவளாவள். பெண்களைச் சிறைப்படுத்திப் பாதுகாக்கின்ற காவலானது ஒரு நன்மையையும் உண்டாக்கமாட்டாது. அப் பெண்டிர் தம் மனத்தைக் கற்புநிலையில் நிறுத்திப் பாதுகாக்கின்ற காவலே சிறந்ததாம். மகளிர் தம்மை மணஞ்செய்துகொண்ட கணவனைப் பேணி வழிபடப் பெறுவாரானுல், தேவர்கள் வாழ்கின்ற உலகின்கண் பெரிய சிறப்பினை அடைவர். புகழை விரும்பிய மனைவியை இல்லாதவர்க்குத் தம்மை இகழ்ந்து கூறுவார் முன்பு, ஆண் சிங்கம் போன்ற பெருமையான நடை இல்லையாம். மனைவியினது குணஞ் செயல்களின் சிறப்பை ஒருவனுக்கு அழகு என்று அறிவாளிகள் சொல்லுவார்கள். நல்ல மக்களைப் பெறுதல் அந்த அழகுக்கு நல்ல ஆபரணம் என்று கூறுவார்கள்.

மறைமலையடிகள் கூறும்

## மங்கையர் மாண்பு

கல்வியில்லாதவர்க்கு உள்ள அழகும் ஒப்பனைகளுஞ் சிறப்பாகமாட்டா. ஆதலால் ஆண் மக்களைப் போலவே பெண்மக்களும் இடைவிடாது கற்றுத் தமது அறிவை நிரம்பவுந் துலக்கிக்கொள்ளல் வேண்டும். கல்வி கற்கக் கற்க அறிவு ஆழமாகச் செல்லுமாதலால், அவர்கட்கு இயல்பாகவுள்ள அமைதிக் குணமும் அதனால் மேலும் மேலும் பெருகும். ஆகவே, பெண்மக்கள் தமது அமைதிக் குணத்திற்கு மிகவும் இசைந்ததான கல்வியைக் கற்றலிற் சிறிதும் பாராமுகமாய் இருத்தல் ஆகாது.

இங்ஙனமெல்லாந் தமது அமைதிக் குணத்தைப் பாதுகாத்து வளர்க்கும் மங்கையர்கள், அக்குணத்தை வெளியே புலப்படுத்துந் தம்முடைய வாய்ச்சொற்களை இனிதாக அமைந்த மெல்லிய குரலிற் பேசப்பழகல் வேண்டும்.

எத்தனை நல்லவர்களாய் இருந்தாலும், இனிமையின்றிப் பரபரப்போடு உரக்கப் பேசுகின்றவர்களைக் கண்டால் எவர்க்கும் அருவருப்பு உண்டாகின்றது. அமைதிக்கே உரியவர்களான பெண்பாலாரிடத்து இப்பொல்லாங்கு காணப்படுமாயின், அது பிறர்க்கு எவ்வளவு உவர்ப்பினைத் தோற்றுவிக்கும்!

> யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
> சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

என்னுந் திருவள்ளுவநாயனர் அருள் உரையை மாதர்கள் எப்போதும் கருத்திற் பதியவைத்தல் வேண்டும்.

இனி மாதர்கள் தம் அமைதிக் குணத்திற்குப் பொருத்தமாகத் தமது உடம்பின் செயல்களை அமைதிப்படுத்தி, நாணமும் அடக்கமும் உடையவர்களாக ஒழுகுதல் வேண்டும். தமது வருவாய்க்குத் தக்கபடி தூய ஆடை அணிகலன்கள் ஆரவாரமின்றி அணிந்து, குளித்தும்

முழுகியுந் தூயராக நடத்தல் அவர் தமக்கு முதன்மையான கடமையாம். இவற்றோடு கடவுளைத் தொழுதலும் அடியாரை ஏற்று அவர்க்குத் தொண்டு செய்தலும் நாடோறும் வழுவாமற் கடைப்பிடியாகச் செய்துவரல் வேண்டும், என்று இவ்வளவும் எல்லாப் பெண்மக்களுக்கும் உரிய கடமைகளில் முதன்மையாவனவாம் என்க.

❋

ஒரு பெண்ணுக்குரிய வாழ்க்கைப் பொருள்களில் அவள் தந்தை கொடுப்பனவும், உடன் பிறந்தார் கொடுப்பனவும், புதல்வர் கொடுப்பனவும், ஓர் அளவுட்பட்டனவாம். கணவன் கொடுப்பனவே அளவில்லாதனவாம். அங்ஙனமாயின் அக்கணவற்கு வழிபாடு செய்யாதவள் யாவள்?

— சுக்கிரநீதி

## சக்கரவர்த்தி

# இராசகோபாலாச்சாரியார்

ஆண்களுக்கு அளிக்கப்படும் கல்வி முடிவாக யாரோ ஒரு முதலாளிக்கோ அல்லது ஒரு அரசாங்கத் திணைக்களத்துக்கோ தான் பயன்படுகிறது. ஆனல் படித்தபெண் தன்னுடைய சொந்த வீட்டிலேயே ஒரு பள்ளிக்கூடத்தை அமைத்தவளாகிருள். பெண்களுக்கு நாம் அளிக்கும் கல்வி ஒரு நல்ல முதலீடு ஆகும்.

நாட்டின் வேலையில் பாதி, வீட்டிலுள்ள தாய்மார்கள் சகோதரிகளால்தான் செய்யப்படுகிறது. குடும்பத்தை நீங்கள் ஒழுங்காகக் கவனித்தாலன்றி குழந்தைகள் நல்ல குடிமக்களாக மாட்டார்கள், நல்லவர்களாக வளரமாட்டார்கள். பெண்கள் தங்களுக்கிடையே சகோதரி பாவத்தை ஏற்படுத்திக்கொண்டால் ஆண்கள் தாமாகவே நண்பர்களாகி விடுவர். பெண்கள் தங்கள் இதயத்தைச் சுத்தமாக வைத்திருத்

தல் வேண்டும். அவர்கள் துவேஷத்துக்கு இடங்கொடுத்தலாகாது. எப்போதும் நல்லெண்ணம் நிலவவேண்டும். மற்றவர்கள் மனதிலும் நல்லெண்ணத்தை ஏற்படுத்தப் பெண்கள் பாடுபடுதல் வேண்டும். பெண்களின் அன்றுட நடத்தை நல்லெண்ணத்தை ஏற்படுத்தப் பெரிதும் உதவுகிறது. சட்டத்தின் மூலம் மாற்ற முடியாதவற்றைக் கல்வி, கலாசாரத்தால் மாற்ற முடியும். கற்றுக்கொடுப்பதற்குத் தாய்க்குலம் தான் சிறந்த தகுதியை உடையது.

## விநோபாஜி

பெண்கள் மாத்திரமே அமைதியாகவும் ஆக்கபூர்வமாகவும் புரட்சிசெய்ய வல்லவர்கள். இவ்வுலக இன்பங்களைத் துறந்து வாழக்கூடிய பற்றற்ற தூயதிருவுருவம் பெண்ணேயாவள்.

வீண்பேச்சு, வதந்தி, சச்சரவு, நிந்தை முதலியவற்றைப் பெண்கள் பேசலாகாது. இரக்கமுள்ள இருதயமே தோட்டமாகும். நற்சிந்தனைகள் நல்ல விதைகளாகும். இனியவை கூறல் மலர்களாகும். நற்செயல்கள் கனிகளாகும்.

எவ்விதமான டாம்பீகச் செலவுகளையும் தவிர்த்துத் தன்னலமற்ற செயல்களில் ஈடுபடுதல் நல்லது. தர்மவழியிலே தூய முறையிலே உழைத்த ஊதியத்தையே தீண்டுதல் வேண்டும். இலஞ்சம் முதலிய ஊழல்கள் நாட்டில் நிலவா திருப்பதற்குக் காவல் செய்தல் வேண்டும்.

பிள்ளைகள் மீது வன்மையாகவோ, குரூரமாகவோ இருத்தலாகாது. எக் காரணங் கொண்டும் பிள்ளைகளை இகழலாகாது. அவர்களை அதிர்ச்சியடையச் செய்யலாகாது. அவர்களை உள்ளார அன்புடன் கவனியுங்கள்.

சீதனம் கொடுப்பதையும், ஏற்பதையும் தவிருங்கள். திருமணம் என்பது பண்டமாற்று வியாபாரம் அன்று.

## சித்தரந்தாதி

காரண மென்னொன் றறிகின்றி லேங்கட லும்மலையு
மாரண மும்மகி லாண்டமு மண்டரண் டம்பொதிந்த
பூரண மும்மக முஞ்சக மும்புற மும்புறத்து
வாரண மும்பெண் பிள்ளைவிளை யாடு மணற்சிற்றிலே.

மில்க்வைற் தயாரிப்புகள் mws மில்க்வைற்

1. சுத்தம் தருவன சுகந்தருவன.
2. செலவைக் குறைப்பன சிரமத்தைக் குறைப்பன.
3. உடம்பைச் சுத்தம் செய்வன.
4. உடைகளைச் சுத்தம் செய்வன.
5. வீட்டைச் சுத்தஞ் செய்வன.
6. சூழலைச் சுத்திகரிப்பன.
7. பயிரை வளர்ப்பன பலனைத் தருவன.

★ நீம் வாசனை சோப்
★ மெடிக்கேட்டட் சோப்
★ ஒலிவ் ஸ்நானப் பவுடர்
★ நீல சோப்
★ நியூ மில்க்வைற் சோப்
★ நீம் சுகாதார தூபம்
★ நீமியா ★ நீமாதியன் ★ நீமாரொக்ஸ்

## மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்


காங்கேயன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

த. பெ. இல. 77 தொலைபேசி: 7233

கிளை: 79, மெசென்ஜர் வீதி, கொழும்பு.



சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்.